# கல்வியைத் தேடும் மாணவனுக்கான அறிவுரைகள்

## இமாம் இப்னு ஜவ்ஸி (ரஹ்)



தமிழில் செய்யது காமித்

இஸ்தப்ரக் பதிப்பகம் Isthapraq publication

ஏக இறைவனின் திருப்பெயரால்...

# கல்வியைத் தேடும் மாணவனுக்கான அறிவுரைகள்

இமாம் இப்னு ஜவ்ஸி (ரஹ்)

தமிழில் - செய்யது காமித்

இஸ்தப்ரக் பதிப்பகம்
**6381653548**
**syedhameedh@gmail.com**

## ஆசிரியரின் முன்னுரை

### இந்த உபதேசத்தை எழுதுவதற்கான காரணம்

அளவற்ற அருளாளனும் நிகரில்லா பேரன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பிக்கிறேன். அவனுடைய உதவியையே நாம் நாடுகிறோம்.

முதல் மனிதரான ஆதமை களிமண்ணிலிருந்து உருவாக்கி, அவருடைய விலா எலும்புகளுக்கும் முதுகு எலும்புக்கும் இடையில் இருந்து அவருடைய சந்ததியை வெளிக் கொண்டு வந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

இரத்த சொந்தங்களையும், பந்தங்களையும் உறவினருக்குத் துணையாக ஆக்கி, அறிவையும், சரியென்ற புரிதலையும் எனக்கு அளித்து, குழந்தைப் பருவத்தில் என்னை நன்கு வளர்த்து, இளமையில் என்னைக் காத்து, சந்ததிகளின் மூலம் ஏராளமான வெகுமதிகள் கொடுத்தவனுக்கே எல்லாப்புகழும்.

رَبِّ ٱجْعَلْنِى مُقِيمَ ٱلصَّلَوٰةِ وَمِن ذُرِّيَّتِى ۚ رَبَّنَا وَتَقَبَّلْ دُعَآءِ○ رَبَّنَا ٱغْفِرْ لِى وَلِوَٰلِدَىَّ وَلِلْمُؤْمِنِينَ يَوْمَ يَقُومُ ٱلْحِسَابُ○

(இப்ராகிம் நபி தனது இறைவனிடத்தில் கீழ்க்கண்டவாறு பிரார்த்தித்தார்கள்)

என் இறைவனே! என்னையும், என் வழித்தோன்றல்களையும் தொழுகையை நிலைநிறுத்தக் கூடியவர்களாக ஆக்கி வைப்பாயாக!

எங்கள் இறைவனே! எனது பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வாயாக!

எங்கள் இறைவனே! மறுமையில் விசாரணை நடக்கும் நாளில் என்னையும், என் பெற்றோரையும், இறைநம்பிக்கையாளர்களையும் மன்னிப்பாயாக!

அல்குர்ஆன் 14:40,41

நான் திருமணம் செய்தல் மற்றும் குழந்தைகளைப் பெறுதல் ஆகிய நற்பண்புகளை கற்றுக்கொண்டேன். அவற்றினால் கிடைக்கும் பயன்களை அறிந்து கொண்டேன். "நான் குர்ஆனை முழுவதுமாகப் படித்தேன்". பின்னர் எனக்கு பத்து குழந்தைகளைத் தருமாறு அல்லாஹ்விடம் கேட்டேன். அவன் என் வேண்டுகோளுக்கு பதிலளித்து ஐந்து ஆண் குழந்தைகளையும் ஐந்து பெண் குழந்தைகளையும் கொடுத்தான். பெண் குழந்தைகளில் இருவரும் ஆண் குழந்தைகளில் நான்கு பேரும் இறந்துவிட்டனர். ஆண்களில் அபுல் காசிம் மட்டுமே உயிருடன் இருக்கிறார்.

நான் அவரை ஒரு பக்தியுள்ள வாரிசாகவும் வெற்றியை அடையக்கூடிய சிறந்த மகனாகவும் ஆக்குமாறு அல்லாஹ்விடம் கேட்டேன். இருப்பினும், (குர்ஆன் மற்றும் ஹதீஸைப் பற்றிய) புனிதமான அறிவைக் கற்றுக்கொள்வதில் அவர்

கவனக்குறைவாக இருப்பதைக் கண்டேன். ஆகவே நான் எவ்வாறு இந்த கல்வியைப் பெறுவதில் முனைப்புக் காட்டுகிறேன் என்பதை விளக்கி எனது மகனை ஊக்குவிக்கும் விதமாக இந்த அறிவுரையை எழுத முடிவு செய்தேன்.

மேலும் இதற்காக அல்லாஹ்வின் உதவியை நாடுகிறேன். அவன் யாருக்கு வெற்றியை வழங்குகிறானோ அவரை யாராலும் வெல்ல முடியாது என்பதையும், அவன் வழிதவறச் செய்பவனை யாராலும் வழிநடத்த முடியாது என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன்.

கண்ணியமிக்க அல்லாஹ் மேலும் கூறியுள்ளான்:

وَتَوَاصَوْا۟ بِٱلْحَقِّ وَتَوَاصَوْا۟ بِٱلصَّبْرِ○

உண்மையைக் கடைப்பிடிக்குமாறும், பொறுமையை மேற்கொள்ளுமாறும் ஒருவருக்கொருவர் அறிவுறுத்தி அறுவுறுத்திக் கொள்ளுங்கள்!

**அல்குர்ஆன்** 103:3

فَذَكِّرْ إِن نَّفَعَتِ ٱلذِّكْرَىٰ○

அறிவுரை பயனளிக்குமாயின் நீர் அறிவுரை கூறுவீராக!

**அல் குர்ஆன் -** 87 : 9

அனைத்து சக்தியும் வலிமையும் அல்லாஹ்வின் கைகளில் மட்டுமே உள்ளது. அவன் உயர்ந்தவன் மற்றும் வல்லமை படைத்தவன்.

## அத்தியாயம் ஒன்று

### நன்மை பயக்கும் உபதேசத்திற்கு முன்பு ஆர்வமூட்டலும் எச்சரிக்கையும்

என் அருமை மகனே! அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டட்டும். நீங்கள் ஒரு விஷயத்தை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். மனிதன் அறிவாற்றலால் மட்டுமே தனித்து நிற்கிறான். ஏனெனில் அதன்படியே அவன் செயல்படுவான். ஆகவே அறிவைப் பெறுவதில் நீங்கள் முனைப்பு காட்டுங்கள். உங்களது சிந்தனையில் அறிவைப் பயன்படுத்துங்கள் மற்றும் உங்களுடன் தனியாக நேரத்தை செலவிடுங்கள்.

நீங்கள் பொறுப்புகளும் கடமைகளும் வழங்கப்பட்ட மனிதப் படைப்பைச் சேர்ந்தவர். உங்களது வலது புறத்திலும் இடது புறத்திலும் இரண்டு மலக்குமார்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் உங்களின் ஒவ்வொரு வார்த்தையையும் பார்வையையும் செயல்களையும் குறிப்பிட்டு வைத்திருக்கிறார்கள். இதை புனித அறிவின் மூலம் நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு சுவாசமும் மரணத்திற்கு ஒரு படி நெருக்கமானது. இவ்வுலகில் நாம் செலவழிக்கும் காலம் மிகக் குறைவு. மண்ணறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் காலம் நீண்டது.

கீழ்த்தரமான ஆசைகளைப் பின்பற்றுவதினால் அல்லாஹ்வால் வழங்கப்படும் தண்டனை பேரழிவு தரக்கூடியதாக இருக்கும்.

இவ்வுலக இன்பம் நிரந்தரமற்றது.

நாம் அனுபவித்த நேற்றைய இன்பம் எங்கே? வருத்தத்தை மட்டுமே விட்டுவிட்டு அது புறப்பட்டது.

ஆன்மாவின் ஆசை எங்கே? எத்தனை பேரைக் அது அழித்திருக்கிறது? எத்தனை பேரை வழுக்கித் தள்ளிவிட்டிருக்கிறது?

மக்கள் தங்கள் இச்சைகள் மற்றும் ஆசைகளுக்கு எதிராக செல்வதன் மூலம் மட்டுமே உண்மையான மகிழ்ச்சியை அடைந்துள்ளனர். இவ்வுலக வாழ்க்கைக்கு முன்னுரிமை கொடுத்து மக்கள் கேவலமானவர்களாக மாறிவிட்டனர்.

மன்னர்கள் மற்றும் துறவிகளின் வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்ளுங்கள்.

மன்னர்களின் மகிழ்ச்சிகள் எங்கே? பக்தியாளர்களின் சிரமங்கள் எங்கே? (அனைத்தும் அழிந்து போகும்)

எஞ்சியிருப்பது எது தெரியுமா? இறையச்சவாதிகளுக்கு ஏராளமான வெகுமதியும் அழகான நற்கூலிகளும், கீழ்ப்படியாதவர்களுக்கு தீங்கிழைக்கும் வார்த்தைகளும் பேரழிவு தரும் தண்டனையும் மட்டுமே.

நல்லொழுக்கச் செயல்களில் சோம்பேறித்தனம் காட்டுவது உண்மையில் ஒரு தீய துணையாகும். மேலும் உலக மோகத்தின் மீதான அன்பு அனைத்து இன்பத்தையும் விட பெரிய வருத்தத்தை ஏற்படுத்துகிறது. எனவே கவனமாக இருங்கள்.

தெரிந்து கொள்ளுங்கள்! இஸ்லாம் நம் மீதி விதித்திருக்கும் கடமையைச் செய்வதும் தடைசெய்யப்பட்டதைத் தவிர்ந்திருப்பதும் அவசியமாகும். ஒருவன் வரம்பு மீறும் போதெல்லாம் அவன் நரக நெருப்பைப் பற்றி எச்சரிக்கையாக இருக்கட்டும். ஆகவே, நற்செயல்களில் ஆசைப்படுவதே உயர்ந்த குறிக்கோள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

நற்செயல்களின் பக்கம் முயற்சி செய்பவர்கள் அந்தஸ்திலும் பதவியிலும் வேறுபடுகிறார்கள். சிலர் உலக மாயைகளில் இருந்து விலகியிருப்பதுதான் நற்செயல் என்று கருதுகின்றனர். மற்றவர்கள் வணக்கத்திற்காக தன்னை அர்ப்பணிப்பதுதான் சிறந்த நற்செயல் என்று நினைக்கிறார்கள்.

இருப்பினும், உண்மை என்னவென்றால், முழுமையான நல்லறம் என்பது அறிவை செயலுடன் சேர்ப்பதைத் தவிர வேறில்லை.

அறிவு மற்றும் செயல் ஆகிய இரண்டும் இணையும் போது படைப்பாளனும், மகத்துவமிக்கவனுமான அல்லாஹ்வை உண்மையாக அறியும் நிலைக்கு ஒரு மனிதனை அது உயர்த்திவிடும். அதன்மூலம் அவனிடம் அல்லாஹ்வைப் பற்றிய அன்பும், பயமும், ஏக்கமும் உண்டாக்குகிறது. இதுவே உண்மையான இலக்கு. இதுவே வெற்றியின் அஸ்திவாரம்.

மக்கள் தீர்மானிப்பதிலும் வேறுபடுகிறார்கள். மக்கள் விரும்பும் அனைவரும் மக்களுக்குத் தேவைப்படுவதில்லை. தேடும் அனைவரும் அவர் தேடுவதைக் கண்டுபிடிப்பதில்லை. இருப்பினும், ஒவ்வொருவரும் தங்கள் இலக்குகளை அடைய முயற்சி செய்ய வேண்டும். ஏனென்றால் "ஒவ்வொருவரும் அவர் எதற்காகப் படைக்கப்பட்டாரோ அதை நோக்கி எளிதாகவே இருக்கிறார்கள்."

அனைத்து உதவிகளும் அல்லாஹ்வின் மூலமே பெறப்படும்.

## அத்தியாயம் இரண்டு

## கடமையான செயல்கள், நல்லொழுக்கமுள்ள செயல்கள் மற்றும் உயர்ந்த முயற்சி

ஒரு நபர் கவனம் செலுத்த வேண்டிய முதல் விஷயம், கண்ணியமிக்க அல்லாஹ்வை அவனது அடையாளங்கள் மூலம் அறிந்துகொள்வதாகும்.

வானம் எப்படி உயர்ந்திருக்கிறது? பூமி எவ்வாறு விரித்து வைக்கப்பட்டிருக்கிறது? மனிதன் எவ்வளவு நேர்த்தியாகப் படைக்கப்பட்டிருக்கிறான்? என்பதைப் பார்க்கிற எவரும், படைப்பாளன் ஒருவன் இருப்பதை உணர்ந்து கொள்வர்.

ஒவ்வொரு கட்டுமானத்துக்கும் ஒரு தயாரிப்பாளர் இருக்க வேண்டும் கட்டப்பட்ட அனைத்திற்கும் ஒரு கொத்தனார் இருக்க வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

அதுபோல இந்த வானத்தையும் பூமியையும் மனிதர்களையும் இதர அனைத்துப் படைப்புகளையும் படைத்த ஒரு படைப்பாளன் இருக்க வேண்டும் என்பதை நாம் உணர வேண்டும். அது அல்லாஹ்தான் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பின்னர் இறைத்தூதரின் உண்மைத்தன்மை பற்றிய சான்றுகளை சிந்திக்க வேண்டும். அவற்றில் மிகப் பெரியது குர்ஆன் ஆகும்.

குர்ஆனில் இருப்பது போன்ற ஒரே ஒரு சூராவை மட்டும் அவர்கள் இயற்ற முயற்சித்தாலும், மனிதர்களால் ஈடுசெய்ய முடியாதது என்று அல்லாஹ் திருமறையில் அறிவித்தான். அது இன்று வரையிலும் நிரூபணமாகி வருகிறது. ஆகவே இறைத்தூதரும் உண்மையானவர் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

படைப்பாளனின் இருப்பு மற்றும் இறைத்தூதரின் உண்மைத்தன்மை குறித்து ஒரு மனிதர் உறுதியாகிவிட்டால், அவர் புனிதச் சட்டத்திற்கு அடிபணிய வேண்டும். ஏனெனில் புனிதச் சட்டத்திற்கு அடிபணியாதது கெட்ட நம்பிக்கையைக் குறிக்கிறது.

இதற்குப் பிறகு, உளூ (சுத்தம்), தொழுகை, பணக்காரர்களுக்கான ஜகாத் (கட்டாய தர்மம்), செல்வமும் உடல் தகுதியும் இருந்தால் ஹஜ் (புனித யாத்திரை) செய்தல் மற்றும் பிற கடமையான செயல்கள் தொடர்பான கடமையான விஷயங்களை

அவர் அறிந்திருக்க வேண்டும். இவற்றின் கடமையான பகுதிகளை அவர் கற்றுக்கொண்டவுடன், அவர் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

உயர்ந்த லட்சியமும், வலுவான உறுதியும் கொண்ட ஒரு மனிதன், நல்லொழுக்கமுள்ள செயல்களில் ஈடுபட்டு தன்னை முன்னேற்ற வேண்டும். அவர் குர்ஆனை மனப்பாடம் செய்வதிலும், தூதரின் ஹதீஸுடன் அதன் விளக்கத்தைப் படிப்பதிலும் மும்முரமாக ஈடுபட வேண்டும். இறைத்தூதரின் வாழ்க்கை வரலாறு, நபித்தோழர்கள் மற்றும் அவர்களுக்குப் பிறகு வந்த அறிஞர்களின் வாழ்க்கையைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும்.

ஒருவர் உயர்ந்த பதவிகளுக்கு ஏற்றார்போல் தன்னை மாற்றி கொள்ளட்டும். பிறகு உயர்ந்த பதவிக்கு முன்னேறட்டும்.

அவர் போதுமான அரபு இலக்கணத்தையும் சரியாகப் பேசுவதற்கு பொதுவாகப் பயன்படுத்தப்படும் மொழியையும் அறிந்திருக்க வேண்டும்.

நீதித்துறை என்பது அனைத்து கலைகளுக்கும் அடிப்படையாகும். ஆனால் மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கையை நினைவூட்டுவது மிகவும் இனிமையானது மற்றும் பொதுவான அளவில் மிகவும் நன்மை பயக்கும்.

அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். ஏனெனில் அவனுடைய அருளால் இந்த துறைகளில் சில புத்தகங்களை என்னால் இயற்ற முடிந்தது. இதனால் நீங்கள் கடந்த கால அறிஞர்களின் புத்தகங்களையோ அல்லது வேறு எந்த புத்தகங்களையோ பார்க்க வேண்டிய அவசியமில்லை. நீங்கள் இந்த புத்தகங்களைப் படிக்க வேண்டும் அல்லது அவற்றை எழுதும் முயற்சியில் உங்கள் கவனத்தை செலுத்த வேண்டும்.

ஒரு நபரின் லட்சியம் அல்லது குறிக்கோள் பலவீனமாகவும் வலிமையற்றும் இருந்தால் மட்டுமே அது தடுமாறுகிறது அல்லது தோல்வியடைகிறது. அது உயர்ந்ததாக இருக்கும் போது, நீங்கள் நிச்சயம் வெற்றியடைவீர்கள். இதனால் குறைவான பலனால் நீங்கள் திருப்தி அடைய மாட்டீர்கள்.

உயர்ந்த நோக்கம் மற்றும் உறுதிப்பாடு மனிதனின் உள்ளார்ந்த இயல்பில் உள்ளது என்பதை சான்றுகள் உங்களுக்குக் கூறுகின்றன. சில நேரங்களில் மட்டுமே இவை பலவீனமாக உள்ளன. மேலும் அவை மீண்டும் வலுவாக இருக்க ஊக்குவிக்கப்பட வேண்டும்.

நீங்கள் உங்களை இயலாமையாகக் கண்டால், படைத்த இறைவனிடம் வலிமையைக் கேளுங்கள். நீங்கள் சோம்பலாக உணரும்போது, இறைவனின் பக்கம் திரும்புங்கள். நீங்கள் அவனுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் மட்டுமே நல்லதை அடைவீர்கள்.

நீங்கள் இறைவனுக்கு கீழ்ப்படியாமல் இருந்தால் அதனால் சில நன்மைகளை இழப்பீர்கள்.

கீழ்ப்படிதலுள்ளவர்கள் அனைவரும் தங்கள் இலக்குகளை அடைவதை நீங்கள் பார்த்ததில்லையா! கீழ்ப்படியாதவர்கள் ஒருபோதும் வெற்றி பெற மாட்டார்கள் அல்லது தங்கள் இலக்குகளை அடைய மாட்டார்கள் என்பதை நீங்கள் பார்க்கவில்லையா!

ஒரு கவிஞர் சொல்வதை நீங்கள் கேட்கவில்லையா?

அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு முன்னால் பூமி
சுருங்கியிருப்பதனாலேயே தவிர நான் உங்களைப் பார்க்க வந்ததில்லை.

நான் என் ஆடையின் நுனி மீது இடறி விழுந்ததைத் தவிர, உங்கள் கதவை
விட்டு வெளியேற நான் ஒருபோதும் தீர்மானிக்கவில்லை.

# அத்தியாயம் மூன்று

## அல்லாஹ்வை அஞ்சுங்கள். அவன் உங்களுக்குக் கற்பிப்பான்

என் அருமை மகனே! அல்லாஹ் விதித்திருக்கும் வரம்புகளை நீங்கள் எவ்வாறு கையாளுகிறீர்கள்? என்பதைக் கவனியுங்கள். மேலும் அல்லாஹ் விதித்திருக்கும் எல்லைக்குள் உங்களை எவ்வாறு வைத்திருக்க முடியும்? என்பதைப் பாருங்கள்.

உண்மையில், இந்த வரம்புகளைக் கவனித்துக் கொள்பவர் அல்லாஹ்வால் நல்ல முறையில் கவனித்துக் கொள்ளப்படுகிறார். இதைச் செய்யாதவர் கவனிப்பாரற்று விடப்படுகிறார்.

நான் இப்போது எனது சில அனுபவங்களை உங்களுக்குக் கூறுகிறேன். இதன் மூலம் நீங்கள் எனது முயற்சியை அறிந்து கொள்ள வேண்டும். மேலும் எனக்கு வெற்றியைத் தந்த அல்லாஹ்விடம் என்னை ஆசீர்வதிக்குமாறு பிரார்த்தனை செய்யுங்கள்.

உண்மையாகவே, எனக்குக் கொடுக்கப்பட்ட இறையருள்களில் பெரும்பாலானவை நானாக சம்பாதித்தவை அல்ல. மாறாக அவை அல்லாஹ்வின் கருணையால் வழங்கப்படுகின்றன.

என்னுடைய சிறுவயது வாழ்க்கையை நான் நினைவு கூர்கிறேன்: ஆறு வயது சிறுவனான நான் அதிக துடிப்புள்ளவனாக இருந்தேன். என்னைவிட வயதில் மூத்த பையன்களுடன் நான் வகுப்பில் அமர்ந்திருந்தேன். எனக்குக் கொடுக்கப்பட்ட புத்தி முதியவர்களின் அறிவுக்கு அப்பாற்பட்டது. நான் மற்ற குழந்தைகளுடன் சாலையில் விளையாடியது அல்லது சத்தமாக சிரித்ததாக எனக்கு நினைவில் இல்லை.

எனக்கு ஏழு அல்லது அதற்கு மேலான வயது இருக்கும் போது, மஸ்ஜிதில் நடந்த கூட்டங்களில் கலந்து கொண்டேன். நான் வெறும் வார்த்தை ஜாலத்தில் திருப்தியுறாமல், நபிகளாரின் வாழ்க்கையைப் பற்றி கூறும் ஹதீஸ் அறிஞரைத் தேடினேன். அவர் சொன்னதையெல்லாம் மனப்பாடம் செய்துவிட்டு, வீட்டுக்குச் சென்று எழுதிக் கொள்வேன்.

எனது ஆசிரியர் அபூ அல்-ஃபத்ல் இப்னு நாசிர் (அல்லாஹ் அவருக்கு அருள் புரிவானாக) அவர்கள் பல்வேறு அறிஞர்களிடம் என்னை அழைத்துச் சென்று முஸ்னத் அஹமது மற்றும் பிற முக்கிய ஹதீஸ் நூற்களை கேட்கும் வாய்ப்புகளை வழங்கினார்கள். இதனால் நான் ஆசீர்வதிக்கப்பட்டேன்.

அப்போது நான் ஏன் இவற்றைச் செய்தேன் என்று எனக்குத் தெரியாது. எனது ஆசிரியரின் வழிகாட்டுதலை பின்பற்றினேன். நான் கேள்விப்பட்ட அனைத்தையும் என் ஆசிரியர் பதிவு செய்தார். நான் பருவமடைந்ததும் இந்தப் பதிவை என்னிடம் ஒப்படைத்தார். அவர் இறக்கும் வரை நான் அவருடன் இருந்தேன். அவர் மூலம் ஹதீஸ் மற்றும் அறிவிப்பாளர் தொடர் பற்றிய அறிவைக் கற்றுக்கொண்டேன்.

சிறு பிராயத்தில் என் வயது குழந்தைகள் டைக்ரிஸ் ஆற்றில் இறங்கி அதன் பாலத்தில் விளையாடுவார்கள். ஆனால் நான் சிறுவனாக இருந்தபோது ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு கரையோரத்தில் அமர்ந்து புனித அறிவைப் படிப்பேன்.

பின்னர் நான் இந்த உலகத்தின் மாயைகளை கைவிட தூண்டப்பட்டேன். அதனால் நான் தொடர்ந்து நோன்பு நோற்க ஆரம்பித்தேன். மேலும் நான் உண்ணும் உணவை குறைத்தேன். குறைவாக சாப்பிடக்கூடியவனாக இருந்தேன்.

நான் பொறுமையாக இருப்பதற்கும், அதற்கான தொடர் முயற்சியில் ஈடுபடுவதற்கும், இரவில் விழித்திருப்பதற்கும் பயிற்சி பெற்றேன்.

நான் ஒரே ஒரு கலையைப் படிப்பதில் திருப்தி அடையவில்லை. அதனால் நான் சட்டவியல், பிரசங்கம் மற்றும் ஹதீஸ் துறை ஆகியவற்றைப் படித்தேன். மேலும் அஸ்ஸுஹ்து எனப்படும் உலகப் பற்றின்மையில் பயிற்சி செய்பவர்களைப் பின்பற்றினேன். அதன் பிறகு அறபு மொழியியல் படித்தேன்.

ஹதீஸ்களை அறிவிக்கும் அனைத்து அறிஞர்களிடமும் ஹதீஸ்களை விளக்கும் அனைத்து போதகரிடமும் நான் சென்றிருக்கிறேன். ஹதீஸ்களை கூறுபவர் வேறொரு இடத்தில் இருந்து புதிதாக வந்தால் நான் அவரிடம் செல்வேன். அந்த அளவிற்கு ஹதீஸ்களை கற்பதில் ஈடுபட்டேன்.

நான் நல்லொழுக்கமான செயல்களில் எனக்குப் பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்தேன். மேலும் இரண்டு விஷயங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டுமானால், நான் அல்-ஹக்கின் (அல்லாஹ்) உரிமையைத் தேர்ந்தெடுத்தேன். அவன் என் வாழ்க்கையைத் திட்டமிட்டு, என்னை அழகான முறையில் வளர்த்து, எனக்கு எது சிறந்தது என்பதை நோக்கி என்னை வழிநடத்தினான்.

என் எதிரிகளிடமிருந்தும், பொறாமை கொண்டவர்களிடமிருந்தும், எனக்கு எதிராக சதி செய்பவர்களிடமிருந்தும் அவன் என்னைக் காப்பாற்றினான். புனித அறிவு பற்றிய எனது ஆய்வுகளுக்கு அவன் எல்லாவற்றையும் வசதியாக்கி, எதிர்பாராத இடங்களிலிருந்து புத்தகங்களை அனுப்பினான். அவன் எனக்கு நல்ல புரிதலையும், மனப்பாடம் செய்து விரைவாக எழுதும் திறனையும், புத்தகங்களை எழுதும் திறமையையும் கொடுத்தான்.

இந்த உலகத்தில் எனக்கு குறையேதுமில்லை. உண்மையில், அல்லாஹ் எனக்கு போதுமானதை விட அதிகமாக வழங்கினான். அவன் என்னை மக்களின் இதயங்களில் பெரிய அளவில் ஏற்றுக் கொள்ளச் செய்தான். மேலும் நான் சொல்வதன் நம்பகத்தன்மையை அவர்கள் கேள்விக்குள்ளாக்காமல் இருக்கச் செய்தான். என்னை நம்பகமானவனாக மக்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

தோராயமாக 200 திம்மிகள் [அதாவது. முஸ்லீம் நிலங்களில் போர்நிறுத்த ஒப்பந்தத்தின்படி வாழும் வேதக்கார மக்கள்] என் கைகளால் முஸ்லிமாகிவிட்டனர். மற்றும் 100000 க்கும் மேற்பட்ட பாவிகள் எனது கூட்டங்களில் கலந்து கொண்ட பிறகு பாவமன்னிப்புக் கோரியுள்ளனர். 20 000 க்கும் மேற்பட்ட ஆண்கள் எனது அறிவுரைகளின் போது முட்டாள்தனமான வழிகளில் இருந்து தங்கள் மனந்திரும்புதலை அறிவித்துள்ளனர்.

நான் வெவ்வேறு அறிஞர்களின் ஹதீஸ் கூட்டங்களுக்குச் சென்றிருக்கிறேன். அப்போது நான் மற்றவர்களை முந்திச் செல்ல வேண்டும் என்பதற்காக மூச்சுத்திணறல் ஏற்படும் நிலை வரை ஓடியிருக்கிறேன். நான் சாப்பிட எதுவும் இல்லாமல் என் நாளை ஆரம்பித்து, எதுவும் சாப்பிடாமல் முடித்து விடுவேன். வேறொருவரிடமிருந்து சாப்பாட்டை பெற்றுக்கொள்ளும் நிலையில் அல்லாஹ் என்னை ஒருபோதும் இழிவுபடுத்தவில்லை. மாறாக என் கண்ணியத்தைப் பாதுகாப்பதற்காக அவன் எனக்கு வழங்கினான்.

உண்மை என்னவென்றால், இதுபோன்ற எனது எல்லா அனுபவங்களையும் குறிப்பிடுவதற்கு அதிக நேரம் எடுக்கும். அனைத்தையும் நான் கூறவில்லை.

இங்கே நான் இப்போது உங்கள் முன்னால் இருக்கிறேன். நான் என்ன சாதித்தேன் என்பதை நீங்கள் நேரடியாக பார்க்கலாம்.

நான் உங்களுக்கு எனது முழு வாழ்க்கையையும் அல்லாஹ்வின் கூற்றின் மூலம் ஒரே வாக்கியத்தில் சொல்கிறேன்.

وَٱتَّقُوا۟ ٱللَّهَ ۖ وَيُعَلِّمُكُمُ ٱللَّهُ ۗ

அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! அல்லாஹ்வே உங்களுக்குக் கற்றுத் தருகிறான்.

அல்குர்ஆன் 2:282

## அத்தியாயம் நான்கு

## நேரம் மற்றும் கிடைக்கும் வாய்ப்புகளிலிருந்து பயனடைதல்

என் அருமை மகனே! உனது சொந்த நலனை கவனத்தில்கொள். உன் முந்தைய குறைபாடுகளுக்கு வருந்துகிறேன்.

உங்களுக்கு இன்னும் நேரம் இருக்கிறது. ஆகவே கல்வியில் தேர்ச்சிபெற்றவர்களின் சகவாசத்தை அடைய கடினமாக உழைக்கவும். உங்கள் மரத்தில் இன்னும் ஈரப்பதம் இருக்கும் போது அதற்கு தண்ணீர் ஊற்றுங்கள்.

இதற்காக நீங்கள் வீணடித்த நேரத்தை நினைவில் கொள்ளுங்கள். காலம் செல்லச் செல்ல, சோம்பேறித்தனத்தின் மகிழ்ச்சி மறைந்துபோகும். அறச் செயல்களின் நிலைகள் தவறிவிடும். உண்மையில், நமது பக்திமிக்க முன்னோர்கள் ஒவ்வொரு நற்பண்பையும் செய்ய விரும்பினர். ஆனால் ஏதேனுமொரு நற்பண்பு தன்னிடத்தில் இல்லை என்று கூறி அழுவார்கள். அந்த அளவிற்கு நற்பண்புகளில் கவனம் செலுத்துவார்கள்.

இப்ராஹிம் இப்னு அத்ஹம் (அல்லாஹ் அவருக்கு அருள் புரிவானாக) அவர்கள் கூறினார்கள்: "நாங்கள் ஒருமுறை நோயுற்றிருந்த ஒரு வணக்கசாலியை பார்க்கச் சென்றோம். அப்போது அவர் அவரது கால்களைப் பார்த்து அழுவதைக் கண்டோம். ‘ஏன் அழுகிறாய்?’ என்று அவரிடம் கேட்டோம். அதற்கு அவர், "அல்லாஹ்வின் பாதையில் எனது கால்கள் அழுக்கு ஆகவில்லை" என்று பதிலளித்தார்.

மற்றொரு நபர் அழுதார். அவரிடம் அவர்கள் 'ஏன் அழுகிறாய்?' என்று கேட்டார்கள். அவர் பதிலளித்தார்: நான் நோன்பு நோற்காமல் கடந்த ஒரு பகலும், நான் நின்று வணங்காமல் கடந்த ஒரு இரவும் சென்றுவிட்டது."

தெரிந்துகொள் மகனே! நாட்கள் என்பது மணிநேரங்களால் ஆனது. மணிநேரங்கள் என்பது நீ எடுக்கும் ஒவ்வொரு மூச்சுக்காற்றினால் ஆனது. ஒவ்வொரு மூச்சுக்காற்றும் ஒரு பொக்கிஷம் ஆகும். எனவே எந்தப் பயனும் இல்லாமல் உனது மூச்சுக்காற்றை செலவழிப்பதிலிருந்து எச்சரிக்கையாக இருங்கள். நியாயத்தீர்ப்பு நாளில் வெற்றுப் பொக்கிஷத்தைக் கண்டு வருந்துவதை நீங்கள் விரும்பாதீர்கள்.

ஆமீர் இப்னு அப்துல் கைஸ் அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, "நிறுத்து. நான் உன்னுடன் பேச விரும்புகிறேன்" என்று கூறினார். அதற்கு அவர் அவரிடம் "சூரியனை உங்கள் கைகளில் பிடித்துக் கொள்ளுங்கள் [அதாவது நேரத்தை நிறுத்துங்கள்]. அவ்வாறு செய்தால் நான் உன்னுடன் பேசுகிறேன்" என்று கூறினார்கள்.

மஃரூஃப் (அல்லாஹ் அவருக்கு அருள் புரிவானாக) அவர்கள் தன்னுடன் அமர்ந்திருந்த சிலரிடம் கூறினார்கள்: "நீங்கள் எழுந்திருக்க விரும்பவில்லையா? நிச்சயமாக, சூரியனிற்கென நியமிக்கப்பட்ட மலக்குகள் அதை இழுத்துச் செல்கிறார்கள். அவர்கள் அதில் சோர்வடையவில்லை [அதாவது நேரம் கடந்து கொண்டிருக்கிறது]."

حَدَّثَنَا أَحْمَدُ بْنُ مَنِيعٍ، وَغَيْرُ، وَاحِدٍ، قَالُوا حَدَّثَنَا رَوْحُ بْنُ عُبَادَةَ، عَنْ حَجَّاجٍ الصَّوَّافِ، عَنْ أَبِي الزُّبَيْرِ، عَنْ جَابِرٍ، عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " مَنْ قَالَ سُبْحَانَ اللَّهِ الْعَظِيمِ وَبِحَمْدِهِ . غُرِسَتْ لَهُ نَخْلَةٌ فِي الْجَنَّةِ "

ஜாபிர் ரலி அறிவிக்கிறார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு ஹதீஸில் கூறினார்கள்: "மகத்துவமிக்க அல்லாஹ்வை புகழ்ந்து துதிக்கிறேன்" (சுபஹானல்லாஹில் அழீம் வபிஹம்திஹி) என்று யார் கூறுகிறாரோ, அதனாலேயே அவருக்குச் சொர்க்கத்தில் ஒரு பேரீச்சம்பழம் நடப்படும்" (திர்மிதீ 3464)

எனவே நேரத்தை வீணடிப்பதால் நீங்கள் இழக்கும் மரங்களைப் பற்றி சிந்தியுங்கள்.

இதனால்தான் நமது முன்னோர்கள் ஒவ்வொரு வினாடியையும் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். உதாரணமாக, கஹ்மாஸ் என்பவர் ஒரு நாளைக்கு மூன்று முறை குர்ஆனை முழுமையாக ஓதுவார்கள்.

அவர்களில் நாற்பது பேர் காலைத் தொழுகையை 'இஷாவுடன் தொழுவார்கள். [அதாவது இரவு முழுவதும் விழித்திருந்து பிரார்த்தனை செய்வார்கள்]

ரபீஆ அல்-அதவிய்யா என்ற பெண் இரவு முழுவதும் தொழுது கொண்டிருந்தார். விடிந்ததும் அவள் சிறிது நேரம் படுத்துக் கொண்டாள். திடீரென்று பயந்து எழுந்து, "கப்ரில் தூங்குவது நீண்டது" என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

அதாவது இவ்வுலக வாழ்க்கை குறைவான நாட்களைக் கொண்டது. கப்ரு வாழ்க்கை நீண்ட நாட்களை கொண்டது. இவ்வுலக நேரத்தை சரியாக பயன்படுத்திக் கொண்டால் கப்ரில் நீண்ட நாள் நிம்மதியாக உறங்கலாம் என்ற சிந்தனையோடு அந்த பெண் இருந்தாள்.

## அத்தியாயம் ஐந்து

## இந்த நித்திய ஜீவனை எதைக் கொண்டு வாங்க முடியும்?

ஒரு நபர் இவ்வுலகில் நுழைவதற்கு முன் அதன் வாழ்க்கையைப் பற்றி சிந்திக்கும்போது, அவர் அதை நீண்டதாகக் கருதுகிறார்.

அவ்வாறே இவ்வுலகை விட்டு பிரிந்து செல்வதைப் பற்றி யோசிக்கும்போது அதன்பிறகு மிக நீண்ட வாழ்க்கை இருப்பதை பார்ப்பார். கப்ரில் தங்குவது நெடுங்காலம் என்று அறிந்து கொள்வார்.

நியாயத்தீர்ப்பு நாளைப் பற்றி சிந்திக்கும்போது, அது ஐம்பதாயிரம் ஆண்டுகள் நீளமானது என்பதை அவர் அறிவார். மேலும் அவர் சொர்க்கம் மற்றும் நரகத்தைப் பற்றி நினைக்கும் போது, அவை ஒருபோதும் முடிவடையாது என்பதை அவர் அறிவார்.

இப்போது, அவர் இந்த உலகில் கழித்த காலத்தை திரும்பிப் பார்த்தால் அவர் வாழ்ந்த மொத்த வருடங்கள் 60 என்று சொல்லலாம். அதில் முப்பது வருடங்கள் தூங்குவதையும், பதினைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்கள் குழந்தை பருவத்தில் கழிப்பதையும், எஞ்சியிருப்பதில் பெரும்பகுதி ஆசைகள், உணவு மற்றும் பணம் ஆகியவற்றைத் துரத்துவதிலும் கழிகிறது.

எஞ்சியிருப்பதை அவர் கணக்குப் பார்க்கும்போது, அதில் பெரும்பகுதி அலட்சியத்தால் நிரம்பியிருப்பதை அவர் காண்கிறார்.

நித்திய ஜீவனின் விலை அவனது வாழ்க்கையின் சில மணிநேரம்தான். ஆனால் அதை வாங்க அவனுக்கு என்ன மிச்சமாக இருக்கிறது?!

## அத்தியாயம் ஆறு

## கவனக்குறைவுக்குப் பிறகு விழிப்பு

என் அருமை மகனே! உனது கடந்தகால கவனக்குறைவால் நல்லதை அடைவதற்கான நம்பிக்கையை இழக்கச் செய்துவிடாதே. ஏனென்றால் நீண்ட தூக்கத்திற்குப் பிறகு பலர் விழித்தெழுந்திருக்கிறார்கள்.

ஷேக் அபூ ஹக்கீம் (அல்லாஹ் அவருக்கு அருள் புரிவானாக) பின்வருமாறு என்னிடம் கூறினார்: 'நான் குழந்தையாக இருந்தபோது, என் நேரத்தை விளையாட்டில் வீணாக கழித்தேன். அப்போது புனிதமான அறிவைப் பெறுவதில் நான் கவனம் செலுத்தவில்லை.

பிறகு என் தந்தை அபூ அப்துல்லாஹ், (அல்லாஹ் அவருக்கு அருள் புரிவானாக) என்னிடம் பேச விரும்பினார். அவர் என்னிடம் கூறினார் : 'என் அருமை மகனே! நான் உனக்காக எப்போதும் இருக்க மாட்டேன். (எனக்கு மரணம் ஏற்பட்டுவிடும்) அதனால் இருபது தினார்களை எடுத்துக்கொண்டு, ஒரு ரொட்டிக் கடையைத் திறந்து கொஞ்சம் பணம் சம்பாதித்துவிடு' என்றார்.

அதற்கு நான்: 'என்ன சொல்கிறீர்கள்?' என்று கேட்டேன்.

அதற்கு அவர், 'அப்படியானால் ஒரு துணிக்கடையைத் திற' என்றார்.

நான் கேட்டேன்: 'நீதிபதிகளின் நீதிபதியான அப்துல்லாஹ் அல்-தமகானிஸின் மகனாக நான் இருக்கும்போது (ரொட்டிக் கடையைத் திற, ஜவுளிக் கடையைத் திற என்று) இதை என்னிடம் எப்படிச் சொல்ல முடியும்?"

அவர் பதிலளித்தார்: 'ஆனால் நீங்கள் அறிவைத் தேடுவதை நான் காணவில்லையே.'

நான் சொன்னேன்: 'இப்போதே எனக்கு ஒரு விரிவுரை கொடுங்கள்.' (எனக்கு அறிவைப் போதியுங்கள்)

அவர் அவ்வாறே செய்தார். அதன்பிறகு நான் அறிவைப் பெறுவதில் மும்முரமாக ஈடுபட்டேன். நான் புனித அறிவைப் படிப்பதை தீவிரமாக எடுத்துக் கொள்ள ஆரம்பித்தேன். அதனால் அல்லாஹ் எனக்கு அதில் வெற்றியைத் தந்தான்.

அபூ முஹம்மது அல்-ஹலவானியின் தோழர் (அல்லாஹ் அவர் மீது கருணை காட்டுங்கள்) என்னிடம் பின்வருமாறு கூறினார்: 'எனது 21 வயதில் என் தந்தை இறந்துவிட்டார். அந்த நேரத்தில் நான் ‘வெட்டிப்பையனாக’ அறியப்பட்டேன்.

அப்போது வாரிசுரிமை சொத்தாக எனக்கு வந்து சேர வேண்டிய வீட்டின் உரிமையை கோரச் சென்றபோது. அதில் வசிப்பவர்கள் கூறுவதைக் கேட்டேன்: முத்பீர், அதாவது அல்-ராபித் [வாழ்க்கையின் அலங்காரத்தை கைவிட்டவர்] வந்துவிட்டார்.'

இதைக் கேட்டதும், 'என்னைப் பற்றி இப்படியா மக்கள் சொல்கிறார்கள்?' என்று எனக்கு நானே கூறிக் கொண்டேன்.

பிறகு நான் என் தாயிடம் சென்று சொன்னேன்: உங்களுக்கு நான் தேவைப்பட்டால் ஷேக் அபூ அல்-கத்தாபின் மஸ்ஜிதில் வந்து என்னைக் காணுங்கள். நான் அவருடன் சேர்ந்திருக்கப் போகிறேன். மார்க்கத் தீர்ப்புகளை வழங்கக் கூடியவனாக ஆன பிறகே அவரைவிட்டு வெளியேறுவேன்.

அதன் பிறகு சிறிது காலத்திற்குள் நான் நீதிபதியாக ஆனேன்.

இப்னுல் ஜவ்ஸியாகிய நான் சொல்கிறேன்: "அவர் சட்டரீதியான தீர்ப்புகளை வழங்குவதையும் விவாதிப்பதையும் நான் பார்த்தேன்."

## அத்தியாயம் ஏழு

## பகலையும் இரவையும் பயிரிடும் முறை

என் அருமை மகனே! ஃபஜ்ரின் தொடக்கத்தில் எழுந்திருங்கள். அப்போது உலக விஷயங்களைப் பற்றி உரையாடாதீர்கள். நம் முன்னோர்கள் உலக விஷயத்தைப் பற்றி உரையாடியது இல்லை.

நீங்கள் எழுந்ததும்,

اَلْحَمْدُ للهِ الَّذِيْ أَحْيَانَا بَعْدَ مَا أَمَاتَنَا وَإِلَيْهِ النُّشُوْرُ

அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா ப(B]ஃத மா அமா(த்)தனா வ இலைஹின் னுஷூர்

"மரணிக்கச் செய்த பிறகு என்னை உயிர்ப்பித்த அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். அவனே எங்களை உயிர்ப்பிப்பான்" என்று கூறுங்கள். (ஸஹீஹ் புகாரி 6312)

பிறகு

الْحَمْدُ اللَّهِ الَّذِي يُمْسِكُ السَّمَاءَ أَنْ تَقَعَ

مَا عَلَى الْأَرْضِ إِلَّا بِإِذْنِهِ ، إِنَّ اللَّهَ بِالنَّاسِ لَرَؤُوفٌ رَحِيم

அல்ஹம்துலில்லாஹில்லதி யும்ஸிகுஸ் ஸமாஅ அன் தஃபஅ மா அலல் அர்ழி இல்லா பி இத்னிஹி இன்னல்லாஹ பின்னாஸி ல ரஊஃபுர் ரஹீம்

மேலும் "வானத்தை பூமியின் மீது விழாமல் தடுத்து நிறுத்திய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். அல்லாஹ்வின் அனுமதியின்றி வானம் விழாது. அல்லாஹ் உண்மையாகவே மக்களுக்கு அருளும் கருணையும் உடையவன்." (அல்குர்ஆன் 22:65) என்று கூறுங்கள்.

பிறகு எழுந்து உங்களைத் தூய்மைப்படுத்திக் கொண்டு (உளூ செய்துவிட்டு) ஃபஜ்ரின் முன் சுன்னத் இரண்டு ரக்அத்தைத் தொழுங்கள். பின் பணிவுடன் மஸ்ஜிதுக்குச் செல்லுங்கள்.

اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ بِحَقِّ السَّائِلِينَ عَلَيْكَ ، وَأَسْأَلُكَ بِحَقِّ مَمْشَايَ هَذَا ، فَإِنِّي لَمْ أَخْرُجْ أَشَرًا ، وَلاَ بَطَرًا ، وَلاَ رِيَاءً ، وَلاَ سُمْعَةً ، وَخَرَجْتُ اتِّقَاءَ سَخَطِكَ ، وَابْتِغَاءَ مَرْضَاتِكَ ، فَأَسْأَلُكَ أَنْ تُعِيذَنِي مِنَ النَّارِ ، وَأَنْ تَغْفِرَ لِي ذُنُوبِي ، إِنَّهُ لاَ يَغْفِرُ الذُّنُوبَ إِلاَّ أَنْتَ

அப்போது கூறுங்கள்: "யா அல்லாஹ்! பிரார்த்தனை செய்து மன்றாடுபவர்கள் உன் மீது வைத்திருக்கும் உரிமையாலும், இப்போது உன் பாதையில் நான் எடுத்து வைத்திருக்கும் என் காலடிச் சுவடுகளாலும் நான் உன்னிடம் கேட்கிறேன். நான் ஆணவத்திலோ பெருமையிலோ அல்லது ஆடம்பரத்திற்காகவோ வெளியே வரவில்லை. உனது கோபத்தைத் தணிக்கவும், உனது மகிழ்ச்சியைத் தேடவும் நான் வந்துள்ளேன். நரக நெருப்பிலிருந்து என்னைப் பாதுகாத்து என் பாவங்களை மன்னிக்கும்படி நான் உன்னிடம் கேட்கிறேன். உன்னைத் தவிர வேறு யாரும் பாவங்களை மன்னிப்பதில்லை.." (இப்னு மாஜா 778, முஸ்னது அஹமது 11156)

தொழுகையில் இமாமின் வலப்பக்கத்தில் உள்ள வரிசையில் நில்லுங்கள். நீங்கள் தொழுது முடித்ததும், பின்வரும் திக்ரை பத்து முறை கூறுங்கள்.

لا إله إلا الله وحده لا شريك له له الملك وله الحمد يحيى ويميت ، بيده الخير وهو على كل شيء قدير

லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வ யுமீது பி யதிஹில் ஹைரு வஹுவ அலா குல்லி ஷையின் கதீர்

"வணக்கத்திற்கு தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவனுக்கு யாதொரு இணையுமில்லை. அனைத்து அரசாட்சியும் அவனுடையதே. எல்லாப் புகழும் அவனுக்கே உரியது. அவனே உயிர் கொடுக்கிறான். அவனே மரணிக்கவும் வைக்கிறான். அவன் கையில்தான் அனைத்து நல்லதும் உள்ளது. அவன் எதையும் செய்ய வல்லவன்."

அதன் பிறகு சுப்ஹானல்லாஹ் என்று பத்து முறையும், அல்ஹம்துலில்லாஹ் என்று பத்து முறையும், அல்லாஹு அக்பர் என்று பத்து முறையும் சொல்லுங்கள். பின்னர் ஆயத்துல் குர்ஸி வசனத்தை ஓதுங்கள்.

பிறகு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்யுங்கள். அவனே மகிமையுள்ளவன். அவன் உங்களது தொழுகையை ஏற்றுக் கொள்வான்.

பிறகு, அமர்ந்து சூரியன் உதிக்கும் வரை மிக உயர்ந்த அல்லாஹ்வை நினைவு கூருங்கள். பிறகு, அல்லாஹ் உங்களுக்காக எழுதிய அளவு தொழுங்கள். எட்டு ரக்அத்கள் உங்களால் தொழ முடிந்தால், அது நல்லது.

# அத்தியாயம் எட்டு

## மார்க்க அறிவு அனைத்தையும் விட சிறந்தது

மதியம் வரை உங்கள் பாடத்தை மறுபரிசீலனை செய்யுங்கள். அதன் பிறகு எட்டு ரக்அத்துகள் லுஹா தொழுகையை தொழுங்கள். பிறகு அஸர் நேரம் வரை நூல்களைப் படிப்பதில் அல்லது நகலெடுப்பதில் மும்முரமாக ஈடுபடுங்கள். அஸர் தொழுகை முடிந்ததிலிருந்து மக்ரிப் நேரம் வரும் வரை உங்கள் படிப்பிற்குத் திரும்புங்கள்.

மக்ரிப் தொழுகைக்குப் பிறகு, இரண்டு ரக்அத்துகள் தொழுது, அதில் இரண்டு ஜுஸ்உகள் குர்ஆனைப் படியுங்கள். பின் 'இஷா' தொழுகைக்குப் பிறகு மீண்டும் படிக்கவும்.

பிறகு படுத்துக் கொள்ளுங்கள். உங்கள் வலது பக்கமாக திரும்பி சுபஹானல்லாஹ் என்று முப்பத்து மூன்று முறையும், அல்ஹம்துலில்லாஹ் என்று முப்பத்து மூன்று முறையும், அல்லாஹு அக்பர் என்று முப்பத்தி நான்கு முறையும் கூறுங்கள்.

பிறகு

اللَّهُمَّ قِنِي عَذَابَكَ يَوْمَ تَبْعَثُ - أَوْ تَجْمَعُ - عِبَادَكَ " .

அல்லாஹும்ம கினீ அதாபக யவ்ம தப்அஸு அவ் தஜ்மவு இபாதக

"யா அல்லாஹ்! உனது அடிமைகளை நீ ஒன்று சேர்க்கும் நாளில் அல்லது அவர்களை உயிர்ப்பிக்கும் நாளில் உனது தண்டனையிலிருந்து என்னைக் காப்பாயாக." (திர்மிதீ 3399) என்று கூறுங்கள்.

நீங்கள் தூக்கத்திலிருந்து விழித்து உங்கள் கண்களைத் திறக்கும்போது, உங்கள் ஆன்மா இப்போது அதன் பங்கைப் பெற்றுள்ளது என்பதை அறிந்து கொள்ளுங்கள். ஆகவே எழுந்து, உளூ செய்து, இரவின் இருளில் உங்களால் முடிந்த அளவிற்கு இரவுத் தொழுகையை நிறைவேற்றுங்கள். இரண்டு இரண்டு ரக்அத்துகளாக உங்களது தொழுகையை அமைத்துக் கொள்ளுங்கள். அப்போது குர்ஆனிலிருந்து

இரண்டு ஜுஸ்உக்களை ஓதவும். அதன்பிறகு, உங்கள் படிப்பைத் தொடங்குங்கள். ஏனெனில் சுன்னத்தான அனைத்து நற்செயல்களை விடவும் புனித அறிவு சிறந்தது."

## அத்தியாயம் ஒன்பது

### இடர்பாடுகள் மற்றும் தடைகளில் ஜாக்கிரதையாக இருங்கள்

(கெட்ட மனிதர்களை விட்டும்) உங்களை தனிமைப்படுத்த பழகுங்கள். எல்லா நன்மைகளுக்கும் அதுவே அடிப்படை. கெட்ட தோழமை பற்றி எச்சரிக்கையாக இருங்கள். மேலும் நமது முன்னோடிகளின் வாழ்க்கையைப் பற்றிய புத்தகங்களும் வாசிப்பும் உங்கள் தோழர்களாக இருக்கட்டும்.

ஒரு கலையைப் பற்றி நன்கு அறிந்து அதில் தேர்ச்சி பெறுவதற்கு முன்னால் அதை ஆராய வேண்டாம். நம்மில் மிகவும் முழுமையானவர்கள் எவ்வாறு அறிவைத் தேடி அதற்கேற்ப செயல்பட்டார்கள் என்பதைப் படியுங்கள். அதைவிடக் குறைவான அறிவினால் மகிழ்ச்சியடைய வேண்டாம்.

ஒரு கவிஞர் கூறியது:

ஆண்களின் தவறுகளில் நான் எதையும் பார்த்ததில்லை
முழுமையை அடைவதில் வல்லவரின் குறையைப் போல

மார்க்க அறிவு தாழ்ந்தவர்களின் நிலையை உயர்த்துகிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள். உண்மையில், பல அறிஞர்கள் அறிஞர்களாக மாறுவதற்கு முன்பு அறியப்படாதவர்களாகவும், பாராட்டப்படாதவர்களாகவும் இருந்தனர்.

உதாரணமாக, அதா இப்னு அபூ ரபா என்பவர் கறுப்பாக இருப்பார். பார்ப்பதற்கு அழகாக இருக்கமாட்டார். அப்போது கலீஃபாவாக இருந்த சுலைமான் இப்னு அப்துல் மாலிக் (Sulaiman ibn 'Abd al-Malik) தனது இரண்டு மகன்களுடன் அவரிடம் வந்து புனித யாத்திரையின் (ஹஜ்) சடங்குகளைப் பற்றி கேட்டார். ஆனால் அவர் அவர்களிடமிருந்து முகத்தைத் திருப்பிக் கொண்டே பதில் சொன்னார்.

கலீஃபா தனது மகன்களிடம் கூறினார்: "எழுந்திருங்கள். அறிவைத் தேடுவதில் சோம்பலாகவோ சோம்பேறியாகவோ இருக்காதீர்கள். ஏனெனில் இந்த கருப்பு அடிமையின் முன் நான் பட்ட இந்த அவமானத்தை ஒருபோதும் மறக்க மாட்டேன்."

அல்-ஹசன், இப்னு சிரின், மக்ஹூல் மற்றும் இவர்களைப் போன்ற மற்ற சிலரும் அடிமைகளாக இருந்தனர். ஆனால் அவர்களுக்கு மரியாதை கொடுக்கப்பட்டது. அவர்கள் இறைவனின் மீதான பயம் மற்றும் அறிவின் மூலம் உயர்ந்த நிலையை அடைந்தனர்.

## அத்தியாயம் பத்து

## தன்னிறைவு

என் அருமை மகனே! இந்த உலகத்தின் பின்னால் ஓடுவதிலிருந்தும், உலக மக்களிடம் உங்களைத் தாழ்த்திக் கொள்வதிலிருந்தும் எச்சரிக்கையாக இருங்கள். உங்கள் கௌரவத்தைப் பாதுகாக்க கடுமையாகப் போராடுங்கள். இறைவன் வழங்கியதில் திருப்தியாக இருங்கள். அதனால் நீங்கள் கௌரவமாக வாழ்வீர்கள்.

ஒரு பழமொழி கூறுகிறது: 'ரொட்டி மற்றும் காய்கறிகளால் திருப்தி அடைபவன் யாருக்கும் அடிபணியமாட்டான்.

ஒரு பெதூயின் (காட்டரபி) ஒருமுறை பாஸ்ராவைக் கடந்து சென்றார்.

அப்போது அவர், 'இந்த நகரத்தின் எஜமானர் யார்?' என்று கேட்டார்.

அவரிடம்: 'அல்-ஹசன் அல்-பஸ்ரி' தான் எஜமானர் என்று கூறப்பட்டது.

பெதூயின் கூறினார்: "அவர் எப்படி அவர்களுக்கு எஜமானரானார்?"

அவர்கள் கூறினார்கள்: "இமாம் ஹசன் பஸரிக்கு மக்களிடத்திலுள்ள உலக விஷயங்களில் எத்தகைய தேவையும் இல்லை. ஆனால் மக்களுக்கோ அவருடைய அறிவு தேவைப்பட்டது".

தெரிந்துகொள் மகனே! என் தந்தை ஆயிரக்கணக்கில் மதிப்புள்ள செல்வத்தை விட்டுச் சென்ற ஒரு பணக்காரர். நான் பருவமடைந்தபோது, எனக்கு இருபது தினார்களும் இரண்டு வீடுகளும் வழங்கப்பட்டன. (உனது தந்தையின் சொத்தில்) எஞ்சியிருப்பது இது மட்டுமே என்று என்னிடம் கூறப்பட்டது.

நான் தினார்களை எடுத்துக்கொண்டு புனித அறிவுகளை சுமந்திருக்கும் புத்தகங்களை வாங்கினேன். நான் வீடுகளை விற்று பணத்தை எனது அறிவின்

வேட்டையில் செலவு செய்தேன். நான் பெற்ற செல்வத்தில் எதுவும் மிச்சமில்லை. அனைத்தையும் அறிவிற்காக செலவழித்தேன்.

உங்கள் தந்தை அறிவுத் தேடலில் தன்னை ஒருபோதும் அவமானப்படுத்தியதில்லை அல்லது மற்ற இமாம்களைப் போல நகரங்களைச் சுற்றி வந்ததில்லை. ‘எனக்கு ஏதாவது தாருங்கள்’ என்று நான் யாரிடமும் எப்போதும் கேட்டதில்லை.

அல்லாஹ்வின் அருளால் எனது அனைத்து விவகாரங்களும் சீராக இயங்குகின்றன:

وَمَن يَتَّقِ ٱللَّهَ يَجْعَل لَّهُۥ مَخْرَجًا ۝ وَيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ ۚ

யார் அல்லாஹ்வை அஞ்சுகிறாரோ அவருக்கு ஒரு வழியை அவன் ஏற்படுத்துவான். அவர் நினைத்துப் பார்க்காத விதத்தில் அவருக்கு உணவளிப்பான்.

அல்குர்ஆன் 65:2,3

## அத்தியாயம் பதினொன்று

## அல்லாஹ்வின் மீது வைத்திருக்கும் உண்மையான பயம் எல்லா நன்மைகளையும் பெற்றுத் தரும்

என் அருமை மகனே! அல்லாஹ்வை உண்மையாக பயந்தால், உனக்கு முன்னால் எல்லா நன்மைகளையும் காண்பாய். தன் இறைவனுக்கு உண்மையாக அஞ்சும் ஒருவன் பிறரைப் பற்றி அஞ்சி கவலைப்படுவதில்லை.

அல்லாஹ்வின் வரம்புகளை யார் கவனித்துக் கொள்கின்றாரோ அவரை அவன் கவனித்துக் கொள்வான்.

அல்லாஹ்வின் தூதர் இப்னு அப்பாஸ் ரலியிடம் கூறினார்கள்: ஓ சிறுவனே! சில விஷயங்களில் நான் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன். அல்லாஹ்வின் கட்டளைகளில் கவனமாக இருங்கள். அவன் உங்களைப் பாதுகாப்பான். அவனுடைய உரிமைகளைப் பாதுகாக்கவும். அவன் எப்போதும் உங்களுடன் இருப்பான். ரியாளுஸ்ஸாலிஹீன் 62

என் அருமை மகனே! யூனுஸ் நபியவர்கள் சேமித்து வைத்திருந்த நற்செயல்கள்தான் அவர்களை கஷ்டத்திலிருந்து காப்பாற்றியது என்பதை மறந்துவிடாதே.

வல்லமையும் மேன்மையுமான அல்லாஹ் கூறுகிறான்:

فَلَوْلَآ أَنَّهُۥ كَانَ مِنَ ٱلْمُسَبِّحِينَ۝ لَلَبِثَ فِى بَطْنِهِۦٓ إِلَىٰ يَوْمِ يُبْعَثُونَ۝

(யூனுஸ் நபி) அவர் (நம்மைப்) போற்றுவோரில் ஒருவராக இல்லாமலிருந்திருந்தால் அவர்கள் (உயிர்ப்பித்து) எழுப்பப்படும் நாள்வரை அதன் வயிற்றிலேயே தங்கியிருப்பார்.

அல் குர்ஆன் - 37 : 143,144

(யூனுஸ் நபியவர்கள் தனது சமுதாயத்தாரிடத்தில் ஏகத்துவத்தை பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் அவர்களோ ஏற்க மறுத்தார்கள். பலவிதங்களில் பிரச்சாரம் செய்தும் மக்கள் திருந்தவில்லை. இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் இன்ன இன்ன அத்தாட்சிகளைக் கொண்டு அல்லாஹ் உங்களுக்கு தண்டனையை இறக்குவான் என்று எச்சரித்தார்கள். ஆனாலும் அவர்கள் திருந்தவில்லை. இறுதியில் யூனுஸ் நபியவர்கள் தனது சமுதாய மக்களுக்கு எதிராக அல்லாஹ்விடத்தில் பிரார்த்தனை செய்தார்கள். அதற்கு அல்லாஹ், யூனுஸ் நபியை அந்த ஊரிலிருந்து வெளியேறிச் செல்லுமாறு கட்டளையிட்டான். அதன்பின் அச்சமுதாய மக்களை அழிப்பதாக யூனுஸ் நபியிடத்தில் கூறினான். ஆகவே அவர்கள் தனது ஊரைவிட்டு வெளியேறிச் சென்றார்கள். அப்போது அந்த ஊராற்கு தனது எச்சரிக்கைக்குரிய அத்தாட்சிகளை அல்லாஹ் எடுத்துக் காட்டினான். யூனுஸ் நபி வாயால் கூறியதை நேரில் கண்டதும் சமுதாயத்தவர்கள் அஞ்சினர். இஸ்லாத்தை தழுவினர். ஆகவே அவர்களை இறைவன் அழிக்காமல் விட்டுவிட்டான். பிறகு யூனுஸ் நபியவர்கள் தனது ஊரார் அழிந்திருப்பார்கள் என்று நினைத்து ஊரிற்கு வந்தார்கள். அதன் பிறகுதான் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட செய்தி யூனுஸ் நபியவர்களுக்கு தெரிந்தது. தனது சமுதாய மக்களை அழிப்பதாக சொன்ன இறைவன் அழிக்கவில்லையே என்ற ஒரு தவறான எண்ணத்தினால் யூனுஸ் நபியவர்கள் ஒரு படகில் ஏரில் கடலில் பயணமானார்கள். ஆகவே இறைவன் அவர்களுக்கு தக்க பாடத்தை வழங்க நினைத்தான். யூனுஸ் நபியவர்கள் படகில் உள்ளவர்களால் கடலில் வீசப்பட்டு பின் மீனானது அவர்களை விழுங்கியது. அவர்கள் மீனின் வயிற்றிற்குள் கடும் சிரமத்தை அனுபவித்தார்கள். அப்போது இறைவனிடத்தில் மன்றாடி திக்ரு செய்து பிரார்த்தித்தார்கள். ஆகவே அவர்களது கஷ்டத்தை இறைவன் நீக்கினான்)

கடலில் மூழ்கடிக்கப்பட்டு ஃபிர்அவ்னிற்கு பேரழிவு ஏற்பட்டபோது அவனால் தப்பிக்க முடியாமல் போனதற்கு காரணம் அவன் தனக்காகச் சேமித்து வைத்திருந்த தீய செயல்கள்தான்.

அவன் கடலில் மூழ்கடிக்கப்படுவதற்கு முன்பு அவனிடம் கூறப்பட்டது:

ءَآلْـَٰٔنَ وَقَدْ عَصَيْتَ قَبْلُ وَكُنتَ مِنَ ٱلْمُفْسِدِينَ○

“இப்பொழுதா (நீ நம்புகிறாய்?) இதற்கு முன்பு நீ மாறு செய்தாய்! மேலும் குழப்பவாதிகளுள் ஒருவனாக இருந்தாய்!”

அல் குர்ஆன் - 10 : 91

எனவே இறையச்சமிக்க நற்செயல்களை உங்களுக்காக நீங்களே சேமித்து வைத்துக் கொள்ளுங்கள். அதன் பலனை நீங்கள் நிச்சயம் காண்பீர்கள்.

நபிகள் நாயகம் கூறியதாக ஒரு ஹதீஸில் பதிவாகியுள்ளது:

مَا مِنْ شَابَ الْقَى اللَّهُ فِي شَبَابِهِ إِلَّا رفعه الله في كبره

"தனது இளமைப் பருவத்தில் அல்லாஹ்விற்கு பயப்படும் இளைஞரைத் தவிர வேறு யாரின் (தகுதியையும்) முதிய வயதில் அல்லாஹ் உயர்த்தமாட்டான்." (ஹில்யத்துல் அவ்லிய்யா 4/139)

ஆகவே நீங்கள் உங்களது இளய வயதில் அதிக நன்மைகளை சேகரித்துக் கொள்ளுங்கள்.

மேலும் அல்லாஹ் கூறுகிறான் :

وَلَمَّا بَلَغَ أَشُدَّهُۥٓ ءَاتَيْنَـٰهُ حُكْمًا وَعِلْمًا ۚ وَكَذَٰلِكَ نَجْزِى ٱلْمُحْسِنِينَ○

(யூசுஃப்) அவர் தனது பருவ வயதை அடைந்தபோது அவருக்கு ஞானத்தையும், கல்வியையும் வழங்கினோம். நன்மை செய்வோருக்கு இவ்வாறே கூலி வழங்குவோம்.

அல் குர்ஆன் - 12 : 22

قَالُوٓا۟ أَءِنَّكَ لَأَنتَ يُوسُفُ ۖ قَالَ أَنَا۠ يُوسُفُ وَهَـٰذَآ أَخِى ۖ قَدْ مَنَّ ٱللَّهُ عَلَيْنَآ ۖ إِنَّهُۥ مَن يَتَّقِ وَيَصْبِرْ فَإِنَّ ٱللَّهَ لَا يُضِيعُ أَجْرَ ٱلْمُحْسِنِينَ○

“நீர் தான் யூஸுஃபா?” என அவர்கள் கேட்டனர். “நான் தான் யூஸுஃப். இவர் என் சகோதரர். எங்களுக்கு அல்லாஹ் அருள் புரிந்துள்ளான். யார் இறையச்சம் கொண்டு, பொறுமையை மேற்கொள்கிறாரோ, அந்த நல்லவர்களின் கூலியை அல்லாஹ் வீணாக்க மாட்டான்” என்று கூறினார்.

அல் குர்ஆன் - 12 : 90

யூசுப் நபியவர்கள் தனது இளமைப் பருவத்தில் பெற்றிருந்த கல்வி ஞானத்தால் பிற்காலத்தில் உயர்ந்த நிலைக்கு உயர்த்தப்பட்டார்கள்.

தடைசெய்யப்பட்டவற்றிலிருந்து உங்கள் பார்வையைத் தாழ்த்துவது, தேவையில்லாமல் பேசுவது, தண்டனைக்குரிய செயல்களில் இருந்து விலகியிருத்தல், உங்கள் மனோஇச்சையின் விருப்பத்தை விட அல்லாஹ்வை விரும்புவது ஆகியவைதான் நீங்கள் சேமிக்கக்கூடிய சிறந்த செயல்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

குகைக்குள் மாட்டிக்கொண்டு மூன்று நபர்கள் பற்றிய சம்பவங்கள் உங்களுக்குத் தெரியும்.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

உங்களுக்கு முன் வாழ்ந்தவர்களில் மூன்று பேர் (ஒன்றாக) நடந்து சென்றனர். இறுதியில் (மலையில் இருந்த) குகையொன்றில் இரவைக் கழிப்பதற்காக தஞ்சம் புகுந்தனர். அதில் அவர்கள் நுழைந்தவுடன் மலையிலிருந்து பெரும் பாறையொன்று உருண்டு வந்து குகைவாசலை அடைத்துவிட்டது. அப்போது அவர்கள் 'நீங்கள் செய்த நற்செயலைக் கூறி அல்லாஹ்விடம் பிரார்த்தித்தால் தவிர நீங்கள் தப்ப முடியாது!' என்று தமக்குள் கூறினர்.

அவர்களில் ஒருவர் 'இறைவா! எனக்கு வயது முதிர்ந்த பெற்றோர் இருந்தனர். நான் அவர்களுக்குப் பால் (கறந்து) கொடுப்பதற்கு முன் என் குடும்பத்தினருக்கோ குழந்தைகளுக்கோ பால் கொடுப்பதில்லை! ஒரு நாள் எதையோ தேடிச் சென்றதால் தாமதமாக வந்தேன். என்னுடைய தாயும் தந்தையும் (முன்பே) உறங்கிவிட்டிருக்க கண்டேன். அவர்களுக்குப் பால் கொடுப்பதற்கு முன், என் குடும்பத்தினருக்கோ என் அடிமைகளுக்கோ பால் கொடுப்பதை நான் விரும்பாததால் அவர்கள் விழிப்பதை எதிர்பார்த்து என் கைகளில் பாத்திரத்தை வைத்துக் கொண்டு காத்திருந்தேன். ஃபஜ்ர் நேரம் வந்ததும் அவ்விருவரும் விழித்துத் தமக்குரிய பாலைக் குடித்தனர். எனவே இறைவா! நான் இதை உன்னுடைய திருப்தியை நாடிச் செய்திருந்தால் நாங்கள் சிக்கிக் கொண்டிருக்கும் இந்தப் பாறையை எங்களைவிட்டு அகற்று!' எனக் கூறினார். உடனே, அவர்கள் வெளியேற முடியாத அளவிற்குப் பாறை சற்று விலகியது!

மற்றொருவர், 'இறைவா! என் தந்தையின் சகோதரரின் மகள் ஒருத்தி இருந்தாள்; அவள் எனக்கு மிகவும் விருப்பமானவளாக இருந்தாள். நான் அவளை அடைய விரும்பினேன்; அவள் என்னிடமிருந்து விலகிச் சென்றாள். அவளுக்குப் பஞ்சம் நிறைந்த ஆண்டு ஒன்று வந்தபோது (பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு) என்னிடம் வந்தாள்; நான் அவளை அடைந்திட அவள் எனக்கு வழிவிட வேண்டும் என்ற நிபந்தனையில் பேரில் நூற்றி இருபது தங்கக்காசுகளை அவளுக்குக் கொடுத்தேன். அவளை என் வசப்படுத்தி (உறவு கொள்ள முனைந்து)விட்டபோது, 'முத்திரையை அதற்கான (மணபந்தத்தின்) உரிமையின்றி உடைப்பதற்கு உனக்கு நான் அனுமதி தரமாட்டேன்!' என்று அவள் கூறினாள். உடனே, அவளுடன் உறவு கொள்ளும் பாவத்(தைச் செய்வ)திலிருந்து விலகிக் கொண்டேன்; அவள் எனக்கு மிகவும் விருப்பமானவளாக இருந்தும் அவளைவிட்டுத் திரும்பி விட்டேன்; நான் அவளுக்குக் கொடுத்த தங்க நாணயத்தை அவளிடமேவிட்டு விட்டேன். இதை உன்னுடைய திருப்தியை நாடி நான் செய்திருந்தால் நாங்கள் சிக்கிக் கொண்டிருக்கும் இந்தப் பாறையை எங்களைவிட்டு அகற்று!' எனக் கூறினார். பாறை விலகியது: ஆயினும் அவர்களால் வெளியேற முடியவில்லை.

மூன்றாமவர், 'இறைவா! நான் சில ஆட்களைக் கூலிக்கு அமர்த்தி அவர்களின் கூலியையும் கொடுத்தேன். ஒரே ஒருவர் மட்டும் தம் கூலியைவிட்டுவிட்டுச் சென்றார். அவரின் கூலியை நான் முதலீடு செய்து அதனால் செல்வம் பெருகியிருந்த நிலையில் சிறிது காலத்திற்குப் பின் அவர் என்னிடம் வந்தார். 'அல்லாஹ்வின் அடியாரே! என்னுடைய கூலியை எனக்குக் கொடுத்துவிடும்!' என்று கூறினார். 'நீர் பார்க்கிற இந்த ஒட்டகங்கள், மாடுகள், ஆடுகள், அடிமைகள் எல்லாம் உம் கூலியிலிருந்து கிடைத்தவைதாம்!' என்று கூறினேன். அதற்கவர்

'அல்லாஹ்வின் அடியாரே! என்னை கேலி செய்யாதீர்!' என்றார். 'நான் உம்மை கேலி செய்யவில்லை!' என்று கூறினேன். அவர் அனைத்தையும் ஒன்றுவிடாமல் ஓட்டிச் சென்றார். 'இறைவா! இதை நான் உன்னுடைய திருப்தியை நாடிச் செய்திருந்தால் நாங்கள் சிக்கிக் கொண்டிருக்கும் இந்தப் பாறையை எங்களைவிட்டு அகற்று!' எனக் கூறினார். பாறை முழுமையாக விலகியது. உடனே, அவர்கள் வெளியேறிச் சென்றுவிட்டனர்!'
என அப்துல்லாஹ்வின் உமர்(ரலி) அறிவித்தார்.

ஸஹீஹ் புகாரி : 2272.

சுஃப்யான் அஸ்-ஸவ்ரி ஒரு கனவு கண்டதாகக் கூறினார். அப்போது அவர் ஒருவரை சந்தித்தார்.

அவர் சுஃப்யானிடம் கேட்டார்: "அல்லாஹ் உனக்கு என்ன செய்தான்?"

சுஃப்யான் பதிலளித்தார்: "நான் கப்ரில் மட்டுமே வைக்கப்பட்டேன். அங்கே நான் அகிலத்தின் இறைவனின் முன் இருந்தேன். நான் உள்ளே நுழைந்தேன். அங்கு ஒருவரைச் சந்தித்தேன்.

அவர் என்னிடம் : 'சுஃப்யானா?' என்று கேட்டார்.

நான்: '[ஆம், நான் தான்] சுஃப்யான்' என்றேன்.

அவர் கூறினார்: 'உங்கள் ஆசைகளை விட அல்லாஹ்வை நீங்கள் விரும்பிய ஒரு நாள் உங்களுக்கு நினைவிருக்கிறதா?'

நான் சொன்னேன்: 'ஆம்' [எனக்கு நினைவிலிருக்கிறது என்று சொன்னவுடன்] எனக்கு உடனடியாக சொர்க்கத்தில் இருந்து பெரிய உணவு தட்டுகள் வழங்கப்பட்டன"

## அத்தியாயம் பன்னிரண்டு

## நமது முன்னோடிகளின் சிறந்த வாழ்க்கை

உங்களது குறிக்கோளை மிகத் தெளிவாக வைத்திருக்க வேண்டும். உலக மோகங்களைவிட்டு தங்களை தனிமைப்படுத்தப்படுவதற்கோ அல்லது புனிதமான அறிவைப் படிப்பதற்கோ பலர் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் அதில் மிகச் சிலரே முழுமையான அறிவை முழுமையான செயலுடன் இணைத்துக் கொள்கின்றனர். அவற்றில் ஒருவராக உங்களையும் ஆக்கிக் கொள்ளுங்கள்.

நான் தாபியீன்கள் மற்றும் அவர்களுக்குப் பின் வந்தவர்களின் வாழ்க்கையைப் பற்றி எனக்கு நானே அறிமுகம் செய்து கொண்டேன். அவர்களில் மிகவும் முழுமையானவர்கள் நான்கு பேர்: ஸைத் இப்னு அல்-முசய்யிப், அல்-ஹசன் அல்-பஸ்ரி, சுஃப்யான் அல்-ஸவ்ரி மற்றும் அஹ்மத் இப்னு ஹன்பால். அல்லாஹ் அவர்களுக்கு அருள் புரியட்டும்.

இவர்கள் சாதாரண ஆண்கள்தான். ஆனால் அவர்களிடம் உயர்ந்த லட்சியங்களும் உறுதியும் இருந்தது. அது நம்மிடம் இல்லை.

எங்கள் முன்னோடிகளில் பலர் அதிக உந்துதல் பெற்றவர்கள். அவர்களைப் பற்றி நீங்கள் அறிய விரும்பினால், ஸிஃபத் அல் ஸஃப்வா என்ற நூலைப் படிக்கவும். சயீத், அல்-ஹசன், சுஃப்யான் மற்றும் அஹ்மத் ஆகியோரின் வாழ்க்கையைப் பற்றி நீங்கள் அறிய விரும்பினால், அவர்கள் ஒவ்வொருவர் பற்றியும் ஒரு முழு புத்தகத்தை எழுதி நான் அர்ப்பணித்துள்ளேன். அவற்றை வாசித்துப் பாருங்கள்.

## அத்தியாயம் பதின்மூன்று

## மனப்பாடம் செய்வது அறிவின் உண்மையான மூலதனம்

என் அருமை மகனே! நான் நூறு புத்தகங்களை எழுதியுள்ளேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவற்றில் ‘அல்-தஃப்சிர் அல்-கபீர்’ என்ற புத்தகம் இருபது தொகுதிகளைக் கொண்டுள்ளது, அல்-தாரிக் எனும் வரலாற்று நூல் இருபது தொகுதிகள் கொண்டது. மீதமுள்ள நூல்களில் சில பெரிய நூல்களும் சில சிறிய நூல்களும் உள்ளன. சிலது ஐந்து தொகுதிகள், சிலது நான்கு, சிலது மூன்று, சிலது இரண்டு மற்றும் சில அதிகமாகவோ அல்லது குறைவாகவோ உள்ளன.

ஏராளமான புத்தகங்களை நான் எழுதியதன் மூலம், இந்த புத்தகங்களை கடன் வாங்கவோ அல்லது அவற்றை எழுதுவதில் கவனம் செலுத்தவோ உங்களுக்குத் தேவையில்லை. ஆனால் நீங்கள் அவற்றை மனனம் செய்வதில் ஈடுபட வேண்டும். மனப்பாடம் செய்வதுதான் உங்கள் முக்கிய மூலதனம். நீங்கள் மனப்பாடம் செய்ததைப் பயன்படுத்துவது உங்களுக்கு நன்மை பயக்கும்.

அல்லாஹ்விடத்தில் நேர்மையாக உதவி தேடுங்கள். அவன் வகுத்திருக்கும் ஹலால் ஹராம் என்ற எல்லைக்குள் நில்லுங்கள். அவன் வெற்றியைத் தருவான்.

يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ إِن تَنصُرُواْ ٱللَّهَ يَنصُرْكُمْ وَيُثَبِّتْ أَقْدَامَكُمْ○

இறைநம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவி செய்தால் அவன் உங்களுக்கு உதவி செய்வான். உங்கள் பாதங்களை உறுதியாக்கி வைப்பான்.

அல் குர்ஆன் - 47 : 7

فَٱذْكُرُونِىٓ أَذْكُرْكُمْ وَٱشْكُرُواْ لِى وَلَا تَكْفُرُونِ○

எனவே, என்னை நினைவுகூருங்கள்! நானும் உங்களை நினைவு கூர்வேன். எனக்கு நன்றி செலுத்துங்கள்! என்னை மறுத்து விடாதீர்கள்!

அல் குர்ஆன் - 2 : 152

وَأَوْفُوا بِعَهْدِىٓ أُوفِ بِعَهْدِكُمْ

எனக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். உங்களுக்கு அளித்த வாக்குறுதியை நான் நிறைவேற்றுவேன்.

அல் குர்ஆன் - 2 : 40

நீங்கள் பெற்றிருக்கும் அறிவை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதிலிருந்து ஜாக்கிரதையாக இருங்கள். ஏனென்றால் ஆட்சியாளர்களுடனும் உலக இன்பங்களில் மூழ்கியிருப்பவர்களுடனும் பழகுபவர்கள் தங்கள் அறிவை நடைமுறைப்படுத்தாமல் அவற்றை முதுகுக்கு பின்னால் தள்ளுகிறார்கள். இது அறிவாளிகளுக்கு அளிக்கக்கூடிய புண்ணியங்களையும் பலனையும் இழக்கச் செய்கிறது.

## அத்தியாயம் பதினான்கு

## அறிவும் செயலும் பின்னிப் பிணைந்தவை

போதிய அறிவு இல்லாமல் வெறும் வழிபாட்டில் ஈடுபடுவதில் கவனமாக இருங்கள். ஏனெனில் பல சந்நியாசிகளும் சூஃபிகளும் அறிவு இல்லாமல் செயல்படுவதால்தான் வழிதவறினர்.

(அறிவு மற்றும் செயல் ஆகிய) இரண்டு அழகான ஆடைகளால் உங்களை மூடிக்கொள்ளுங்கள். அது உங்களை உலக மோகத்தில் மூழ்கியிருப்பவர்களுக்கு மத்தியில் அவர்களின் உன்னதத்தால் பிரபலமாக்காது. அல்லது துறவிகள் மத்தியில் அவர்களின் முரட்டுத்தனத்தால் பிரபலமடையாது. நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு பார்வைக்கும், வார்த்தைக்கும், அடிக்கும் உங்களை நீங்களே கவனித்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் பேசுவதைக் கேட்பவர்கள், உங்கள் அறிவால் நீங்கள் எவ்வளவு பயனடைகிறீர்கள் என்பதைப் பொறுத்துப் பயனடைவார்கள். ஒரு போதகர் தனது அறிவை தனது வாழ்வில் பயன்படுத்தாதபோது, அவருடைய அறிவுரைகள் பாறையிலிருந்து தண்ணீர் பாய்வது போல இதயத்தின் மேற்பரப்பில் இருந்து பாயும்.

எனவே, நல்ல எண்ணம் இல்லாமல் பிரசங்கம் செய்யாதீர்கள். நல்ல எண்ணம் இல்லாமல் நடக்காதீர்கள்.

நமது முன்னோடிகளின் குணாதிசயங்களை நீங்கள் அறிந்தவுடன் இவை அனைத்தும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

## அத்தியாயம் பதினைந்து

## படிக்க வேண்டிய சில சிறந்த புத்தகங்கள்

நீங்கள் மின்ஹாஜ் அல்-முரிதீன் என்ற புத்தகத்தைப் படிக்க வேண்டும். ஏனெனில் இந்த புத்தகம் உங்கள் இறைவனுடன் சரியாகப் பழகும் வழியைக் கற்பிக்கும். அதை உங்கள் துணையாகவும் ஆசிரியராகவும் ஆக்குங்கள்.

மேலும், உங்கள் உலக மற்றும் மத விவகாரங்களை சீர்செய்வதில் உங்களுக்கு உதவும் நிகழ்வுகளைக் குறிப்பிடுவதால், சைத் அல்-காதிர் (புரிந்து கொண்ட எண்ணங்கள்) என்ற புத்தகத்தைப் படிக்கவும்.

ஜன்னத் அல்-நதாரை மனப்பாடம் செய்யுங்கள். ஏனெனில் இது உங்களுக்கு நீதித்துறையைப் பற்றி போதுமான அறிவை அளிக்கிறது.

அல்-ஹதாயிக்கைப் படிக்க நேரத்தைச் செலவிடுங்கள். மேலும் இது பெரும்பாலான ஹதீஸ்களைப் பற்றி உங்களுக்குத் தெரிவிக்கிறது.

அல்-கஷ்ஃப் என்ற புத்தகத்தைப் படிப்பதன் மூலம் புகாரி மற்றும் முஸ்லிமில் உள்ள ஹதீஸ்களில் மறைந்திருக்கும் நன்மைகளை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

அரேபியர்கள் அல்லாதவர்களால் எழுதப்பட்ட குர்ஆன் விளக்கவுரைகளில் உங்களது கவனத்தை செலுத்தாதீர்கள். உண்மையில் அல்-முக்னி மற்றும் ஜத் அல்-மஸீருக்குப் பிறகு உங்களுக்கு வேறு எந்த விளக்கங்களும் தேவையில்லை.

உபதேசங்களைப் பொறுத்தவரை, உங்களுக்கு போதுமான அளவிற்கான உபதேசங்களை நான் சேகரித்து வைத்திருக்கிறேன்.

## அத்தியாயம் பதினாறு

## நன்மை பயக்கும் அழைப்பாளரின் சிறந்த பண்புகள்

மற்றவர்களுடன் நல்ல முறையில் பழகுங்கள். அதே நேரத்தில் உங்களை நீங்களே தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் தனிமைப்படுத்தல் கெட்டவர்களுடன் பழகுவதில் இருந்து உங்களைப் பாதுகாக்கிறது மற்றும் உங்கள் கண்ணியத்தைப் பாதுகாக்கிறது.

ஒரு அழைப்பாளர், சாதாரண மக்களைப் போல நடந்துகொள்வதையோ அல்லது சந்தையில் நேரத்தை செலவிடுவதையோ அல்லது சத்தமாக சிரிப்பதையோ மற்றவர்கள் பார்க்கக்கூடாது. மக்கள் அவரைப் பற்றி நல்ல அபிப்பிராயத்தை வைத்திருப்பதையும், அவர் பேசும்போது அவருக்குக் காது கொடுப்பதையும் உறுதிப்படுத்துவதற்காக இது அவசியமாகும்.

இருப்பினும், உங்களுக்கு வேறு வழியில்லை என்றால், அவர்களுடன் கலந்து கொள்ளும்போது உங்கள் கோபத்தை கட்டுப்படுத்தி, மற்றவர்களை பொறுத்துக்கொள்ளுங்கள். ஏனெனில் அவர்களின் உண்மையான நடத்தையை ஒருமுறை பார்த்தால், உங்களால் அவர்களுடன் கலக்க முடியாது.

## அத்தியாயம் பதினேழு

## மற்றவர்களின் உரிமைகளை நிறைவேற்றுதல்

மனைவிகள், குழந்தைகள் மற்றும் உறவினர்கள் ஆகிய அனைவருக்கும் அவர்களின் சரியான உரிமைகளை வழங்குங்கள். உங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு மணிநேரத்தையும் கவனித்து அதை எப்படி செலவிடுகிறீர்கள் என்று பாருங்கள். மிகவும் மரியாதைக்குரிய வழியிலேயே தவிர அதைப் பயன்படுத்தாமல் இருக்க முயற்சி செய்யுங்கள். உங்கள் சுயத்தை வீணாக்காதீர்கள் மற்றும் சிறந்த விஷயங்களைச் செய்யும் பழக்கத்தைப் பெறுங்கள். கப்ரு வாழ்க்கைக்காக சிறந்தததை சேகரித்து வையுங்கள். நீங்கள் அங்கு சென்றதும் அது உங்களை மகிழ்ச்சியடையச் செய்யும்:

நீண்ட காலமாக தனது நம்பிக்கைகளால் ஏமாற்றப்பட்டு ஜட வாழ்க்கையின் பின்னால் ஓடியவரே!

மரணம் உங்களுக்கு திடீரென்று வரும் மற்றும் கப்ரு என்பது செயல்களின் மார்பாகும்.

நீங்கள் விரும்பும் மற்றும் விரும்பாத விஷயங்களில் பொறுமையை மேற்கொள்ளுங்கள். அனைத்து விஷயங்களின் விளைவுகளிலும் கவனம் செலுத்துங்கள். சில சமயங்களில் நீங்கள் உங்கள் கடமைகளை அலட்சியப்படுத்துவதைக் கண்டால், உங்கள் ஆன்மாவை கப்ருகளுக்கு அழைத்துச் சென்று, அது இந்த உலகத்தை விட்டு வெளியேறும் நாள் அருகிலுள்ளதை நினைவூட்டுங்கள்.

உங்களது அனைத்து விவகாரங்களையும் திட்டமிடுங்கள்.

அல்லாஹ்வே உண்மையான திட்டமிடுபவன். அவன் நாடியதே நடக்கும்.

செலவு செய்யுங்கள் ஆனால் நீங்கள் மற்றவர்களுக்குத் தேவைப்படாமல் இருக்க முட்டாள்தனமாக செலவு செய்யாதீர்கள். கஞ்சத்தனமும் ஊதாரித்தனமும் ஆபத்தாகும். நடுநிலையை பேணுங்கள்.

ஒருவர் தனது செல்வத்தைக் கவனித்துக்கொள்வது இந்த மார்க்கத்தின் ஒரு பகுதியாகும். மேலும் "மற்றவர்களுக்குத் தேவைப்படுவதை விட உங்கள் வாரிசுகளுக்கு எதையாவது விட்டுச் செல்வது நல்லது."

## அத்தியாயம் பதினெட்டு

## ஒரு அழகான இறுதி அறிவுரை

என் அருமை மகனே! நம்முடைய பரம்பரையைச் சேர்ந்தவர்கள் அபூபக்கர் சித்தீகின் மகன்களிடமிருந்து வந்தவர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். எங்கள் தந்தை அல்-காசிம் முஹம்மது இப்னு அப்துல் ரஹ்மான் இப்னு அபூபக்ர் இப்னு முஹம்மது இப்னு அபூபக்கர் (ரழி அல்லாஹு அன்ஹு) ஆவார். அவர்களின் வாழ்க்கை 'ஸிஃபத் அல் ஸஃபியாவில் விமர்சன ரீதியாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

அவருக்குப் பிறகு, எங்கள் முன்னோர்கள் வணிகர்களாக இருந்தனர். எனவே பிற்கால குடும்பங்களில் என்னைத் தவிர புனிதமான அறிவைத் தொடர உந்துதல் பெற்றவர்கள் யாரும் இல்லை. இப்போது உங்கள் முறை வந்துவிட்டது. ஆகவே மார்க்க அறிவைப் பெறுவதில் கடுமையாகப் போராடுங்கள். உனக்காக நான் எதிர்பார்த்ததை விட்டுவிடாதே.

உங்கள் விவகாரத்தில் நான் விரும்பியதை மகத்துவமிக்க அல்லாஹ் தருவான் என்று நான் நம்பியிருக்கிறேன். மேலும் அறிவிலும் அதன் பயன்பாட்டிலும் உங்களுக்கு வெற்றியை வழங்க நான் அவனிடம் மட்டுமே கேட்டுக்கொள்கிறேன்.

என்னால் உங்களுக்கு அறிவுரையாக கூற முடிந்தது இதுதான். மிக உயர்ந்த மற்றும் கண்ணியமிக்க அல்லாஹ்விடம் எல்லா வல்லமையும் சக்தியும் உள்ளது.

எப்போதும் அதிகரித்து வரும் புகழ் அல்லாஹ்வுக்கே உரித்தாகட்டும். அவனுடைய ஆசீர்வாதமும் சாந்தியும் நமது தலைவர் முஹம்மது மற்றும் அவரது குடும்பத்தினர் மற்றும் தோழர்கள் மீது உண்டாகட்டுமாக.